**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 135/2022**
**Deposition of witness of Defendant – D.W.1(வீரையா)**
**23.4.2024**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் 10 வருடங்களாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறனோ என்றால் இல்லை. நான் 20 வருடங்களாக மகாராஸ்டிராவில் இருந்து வருகிறேன். ஒடுகம்பட்டியில் வசித்து வரும் முஸ்லிம் மக்களில் தமிழ் பேசுபவர்களை சாகிபு என்றும் உறுது பேசுபவர்களை பட்டாணி என்றும் அழைப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து 1958ம் வருட பத்திரமான வா.சா.ஆ.1ல் கன்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகு அந்த பத்திரத்தில் என்ன சொத்து உள்ளது என்று படித்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் அதுபற்றி எனக்கு புரியவில்லை. அவ்வாறு புரியாமல் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1958ம் வருடத்தில் உண்மையான உரிமையாளர்களிடமிருந்து தாவா சொத்து வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றும் அதை மறைத்து பொய்யான வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் எதிர் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி முகமது காசிம் என்பவருக்கும் சேர்த்து வழக்கு நடத்திவருகிறேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் அப்பா பெயர் காதர்சா ஆகும். காதர்சாவின் அப்பா பெயர் கா.சேக்முகமது ஆகும். முகமது காசிமின் அப்பா மற்றும் தாத்தா ஆகியோரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த சமயத்தில் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று வாங்கவில்லை. எந்த வருடத்திலிருந்து வாங்குவது இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வம்சாவளி பட்டியல் தொடர்பாக ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் வாதியின் முன்னோர்களால் கிரையம் வாங்கப்பட்டு வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்களுக்கு முந்தைய ஆவணங்கள் தான் வாதி தரப்பு ஆவணங்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 பட்டா மாறுதல் உத்தரவு தொடர்பாக யார்யாரை அழைத்து விசாரித்தார்கள் என்று எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தாவா சொத்தின் இடத்துகாரர் யார் என்றால் முகமது காசிம் ஆகும். பத்திரம் எழுதுவதற்கு தேவையான ஆவணங்கள் மட்டும் முகமதுகாசிம் கொடுத்தார் இதர ஆவணங்கள் அவரிடம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 முதல்

பி.வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் 2ம் பிரதிவாதி என்னிடம் கொடுத்தாரா என்றால் ஒருசில ஆவணங்களை 2ம் பிரதிவாதி கொடுத்தார் ஒருசில ஆவணங்களை மாவட்ட ஆட்சிதலைவர் அலுவலகத்தில் பெற்றேன். கிரையப்பத்திரம் எழுதிய அன்று என்னிடம் என்னென்ன ஆவணங்கள் கொடுத்தார் என்றால் உத்தரவு நகல், வில்லங்க சான்று , சிட்டா ஆகியவை கொடுத்தார். பி.வா.சா.ஆ.7ல் பட்டா எண் 1455 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 எந்த பட்டா எண்ணிற்கு உரியது என்றால் ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.7ல் கண்ட பட்டா என்னிடம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.4 கிரையப்பத்திரம் மோசடியாக எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதில் உள்ள தாள்களின் எண்ணிக்கை வேறுபடுவதால் அது மோசடியாக உருவாக்கப்பட்ட பத்திரம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்கு பிறகு என்னால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்துகொண்டு அதன் அடிப்படையில் கிரையம் பெற்று தாவா சொத்தில் உரிமை கொண்டாடுவதால் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. வாதியின் வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை